செ.வெ.எண்: 246 நாள்: 24.3.2020

**144 தடை உத்தரவை மீறுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**அத்தியாவசிய பொருட்களை அதிக விலைக்கு விற்றால் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

144 தடை உத்தரவை மீறுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில், கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக இன்று 24.3.2020 மாலை 6 மணி முதல் 1.4.2020 காலை 6 மணி வரை குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144 ன் கீழ் கட்டுப்பாடுகளுடன் தடை உத்தரவு பிறப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், பொதுமக்கள் நலன் கருதி குற்றவியல் முறைச்சட்டம் பிரிவு 144 ன் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று 24.3.2020 மாலை 6 மணி முதல் 1.4.2020 காலை 6 மணி வரை நடைமுறையில் இருக்கும். இந்த உத்தரவின்படி கீழ்க்கண்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

பொது இடங்களில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடுவது தடை செய்யப்படுகிறது. பொதுமக்கள் அனைவரும் வீட்டிலேயே தங்கியிருக்க தெரிவிக்கப்படுகிறது. அத்தியவாசியத் தேவைகளுக்காக மட்டுமே வெளியில் வரவேண்டும், அப்படி வரும்போது ஒரு மீட்டர் அல்லது 3 அடி இடைவெளியில் பயணிக்கும்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அத்தியாவசிய மற்றும் அவசரப் பணிகள் தவிர மற்ற பொது போக்குவரத்து, தனியார் போக்குவரத்து, மகிழுந்துகள், ஆட்டோ, டாக்ஸி போன்றவை இயங்காது. மாவட்டங்களுக்கு இடையேயும் ஆன போக்குவரத்து அத்தியாவசிய இயக்கத்திற்கு தவிர மற்ற இயக்கம் முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்களுக்கான பால், காய்கறி, மளிகை, இறைச்சி, மீன் கடைகள் போன்றவை தவிர அனைத்து கடைகளும், வணிக வளாகங்களும், பணிமனைகளும் இயங்காது.

அத்தியாவசித் துறைகள் மற்றும் அலுவலகப் பணிகள் தவிர மற்ற அரசு அலுவலகங்கள் செயல்படாது. அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் அரசுத் துறைகளான மாவட்ட நிர்வாகம், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை, நீதிமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை தொடர்ந்து இயங்கும். எனினும், தனிநபர் சுகாதார நடவடிக்கை உட்பட அனைத்து நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அலுவலகங்களில் பின்பற்றப்பட வேண்டும்.

தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்ப மற்றும் உயிர் தொழில்நுட்ப தொழில் அலுவலகப் பணியாளர்கள் வீட்டில் இருந்தே வேலை செய்ய வேண்டும். எனினும், அத்தியாவசிய பணிகளையும் மருத்துவம் உள்ளிட்ட பணிகளையும் மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் தொடர்ந்து இயங்கும்.

வீடுகளில் இல்லாமல், விடுதிகள் மற்றும் பிற இடங்களில் தங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான பணியாளர்களின் நலன் கருதி, பார்சல் மூலம் மட்டும் உணவு வழங்கும் வகையில் உணவகங்கள் திறந்திருக்க அனுமதிக்கப்படும். அம்மா உணவகங்கள் வழக்கம் போல செயல்படும்.

பொதுமக்களுக்கு தேவையான உணவு, குடிநீர், காய்கறிகள், பால், மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் தங்குதடையின்றி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் தேவையில்லாமல் பொதுஇடங்களுக்கு வருவதை தவிர்க்க வேண்டும். மருத்துவமனை, மருந்தகங்கள் உள்ளிட்ட ஒருசில கடைகளை தவிர பிற கடைகளை முழுவதுமாக மூடவும், திருமணமண்டபங்களையும் மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனா குறித்த சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் 24 மணிநேர கட்டுப்பாட்டு அறையினை 1077 மற்றும் 04322-222207 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இதுதவிர வெளிநாட்டில் இருந்து வந்து அரசுக்கு தகவல்கள் தெரிவிக்காமல் இருப்பவர்கள் குறித்தும் பொதுமக்கள் இந்த எண்ணில் தகவல் தெரிவிக்கலாம். காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படாமல் கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. பால், காய்கறி, மளிகை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை அதிக விலைக்கு விற்றால் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் 144 தடை உத்தரவை மீறும் நபர்கள் மீது காவல்துறை மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**